# OM CHARITABLE TRUST

Regd. Office: 49, Five Furlong Road, Guindy, Chennai – 600032, Tamilnadu, India
Website: www.omcharitabletrust.com E-mail: omcharitabletrust@gmail.com
Ph: 91-9600043276, 91-9551051437


24/12/2023

**வேதபாடஶாலைஅறங்காவலர்கள்/தலைமை ஆசிரியர்/அத்யாபகர்கள் ஆகியோர்க்கு**

நமஸ்தே.

பிரபஞ்சத்தை உருவாக்கி, நிலைநிறுத்தி தன்னுள் அடக்கும் பகவானின் பரிபூரணஆசீர்வாதங்கள் தங்களுக்கு ஏற்பட ஓம் சாரிடபள் ட்ரஸ்ட் விழைகிறது. வேதங்களை மூச்சுக் காற்றாகக் கொண்ட இறைவனின் அருளால், அறக்கட்டளை கடந்த 15 ஆண்டுகளாக தேசிய அளவில் வேதப் போட்டியை நடத்தி வருகிறது.

பாடஶாலைகளும், பயிலும் மாணவர்களும் பல ஆண்டுகளாக அவர்களின் சுயமுயற்சியின் பலனாக தமது கல்வித் தரத்தை மேம்படுத்தி உள்ளனர் என்பதை எங்கள் அனுபவத்தில் இருந்து நாங்கள் காண்கிறோம். அதன்படியே, அறக்கட்டளையும் அதன் ஊக்கமளிக்கும் கொள்கையிலிருந்து அதிகாரமளிக்கும் வகைக்குத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் நினைக்கிறோம். இந்த திசையில், கீழ்காணும் முறையில் வேதபரீக்ஷைகள் மாற்றத்தால் மேம்படுத்தப்பட்டுள்ளது.
அ) <u>பரீக்ஷை முறை</u>: சிறுபகுதி வேதப்போட்டியிலிருந்து முழுபகுதி பூர்த்திபரீக்ஷா என்ற வகையில் வேதக்கல்வியைப் பரிசோதித்தல் மற்றும்
ஆ) <u>மாணவர் சமூகம்</u>: மூலம், க்ரமம் மற்றும் கனபாடங்களைப் பூர்த்தி செய்த மாணவர்களின் சமூகம்.

2024 முதல், அதன் 16வது ஆண்டிலிருந்து, பெரியவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆசிர்வாதத்துடன், ஓம் சாரிடபள் அறக்கட்டளையானது "வைதிக விஞ்ஞான விகாஸினீ ஸபா" என்ற பெயரில் ஒரு ஸபையைத் தொடங்குகிறது எனத் தாழ்மையுடன் அறிவிக்கிறோம். அந்த ஸபையே வருங்காலங்களில் வேதப் பரீட்சையை நடத்தும்.

இந்தத் திட்டத்தின் கீழ் பங்கேற்பது தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த முறை மாற்றமானது, சிறந்த மொழி உச்சரிப்பு, நினைவாற்றல் மற்றும் ஸ்வர உச்சரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய அறிவு மற்றும் ஓதும் திறனைப் பற்றிய விரிவான சோதனையை நடத்தி, முழுமையான மதிப்பீட்டின் அடிப்படையில் மதிப்பெண்களை வழங்கும் சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த பரீக்ஷா அதிகாரிகள் குழுவின் சான்றிதழை பெற உதவி, மாணவர் சமூகத்திற்கு பயனளிக்கும்.

வைதிக விஞ்ஞான விகாஸினீ ஸபா பரீக்ஷைகளில் மூலபாடம் (ஸம்ஹிதை/ப்ராஹ்மணம்), க்ரமபாடம் மற்றும் கனபாடம் முடித்த மாணவர்களே கலந்து கொள்ள முடியும். இப் பரீக்ஷைகள் ரிக், ஶுக்ல யஜுர், க்ருஷ்ண யஜுர் மற்றும் ஸாம வேதங்கள் பயின்ற மாணவர்களுக்கு மட்டுமே தற்போதைக்கு நடத்தப்படும்.

இத்தனை வருடங்கள் அனைத்து பாடஶாலைகளும் குறிப்பாக உங்கள் பாடஶாலை எங்களுக்கு அளித்த தடையில்லா ஆதரவிற்காக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். ஓம் சாரிடபள் ட்ரஸ்ட் மேற்கொண்டுள்ள இந்த புதிய முயற்சியில் உங்கள் தொடர்ச்சியான ஆதரவையும் செயலில் பங்கேற்பையும் தாழ்மையுடன் கோருகிறோம்.

மேலும் விவரங்களுக்கு, நீங்கள் ஸ்ரீ சூர்யநாராயணன் அவர்களை 9840712172 அல்லது ஸத்யநாராயண ஆத்ரேயம் அவர்களை 7349511810 என்ற எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

பணிவான ப்ரணாமங்களுடன்,
**அறங்காவலர்கள்**

# வைதிக விஜ்ஞான விகாசினி ஸபா

## பரீக்ஷைக்கான அழைப்பு

### தகுதி

1. இந்த ஸபா, மூலபாடம், க்ரமபாடம் மற்றும் கனபாடம் ஆகியவைகளை, ரிக், ஶுக்ல யஜுர், க்ருஷ்ண யஜுர், மற்றும் ஸாம வேதங்களில் முழுவதுமாக முடித்த மாணவர்களிடமிருந்து பரீக்ஷையில் பங்குகொள்ள விண்ணப்பங்களை அழைக்கிறது. அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் மற்றும் தகுதியான மாணவர்களுக்கு தேர்வு குறித்து அறிவிக்கப்படும்.

2. பரீக்ஷைக்கு விண்ணப்பிப்பவர், ஏதேனும் ஒரு பாடஶாலையில் அல்லது ஏதேனும் வேத பண்டிதரின் கீழ் தனித்தனியாகப் படிக்கும் மாணவர்களாக இருக்கலாம் அல்லது படிப்பை முடித்த மற்றும்/அல்லது ஆதாயமான வேலைவாய்ப்பைப் பெற்றவர்களாக இருக்கலாம். ஸபா பரீக்ஷையில் சேர்வதற்கான வயது, தேர்வில் கலந்துகொள்ளும் ஆண்டின் ஜூன் 30 ஆம் தேதியின்படி 30 (முப்பது) ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3. முழு பாடத்திட்டத்தையும் மனப்பாடம் செய்து, நினைவாற்றலில் இருந்து ஓதக்கூடிய மாணவர்கள் மட்டுமே தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

4. தாங்கள் பரீக்ஷை கொடுக்க விரும்பும் பாடத்திட்டத்தை முடிக்காத மாணவர்கள் அல்லது பாடத்திட்டத்தை போதுமான அளவு மனப்பாடம் செய்யாதவர்கள் அல்லது இங்கு பத்தி 12 மற்றும் 13-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு முறைக்கு ஏற்ப விடையளிக்க போதுமான அளவு அதாவது 60% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெறும் அளவிற்குத் தயார் செய்யாத மாணவர்கள், தேர்வில் சேரவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் தேர்வு நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைக் குறிப்பிடும் "அழைப்புக் கடிதம்" மூலம் அறிவிக்கப்படுவார்கள் மற்றும் தகுதியான விண்ணப்பதாரர்கள் அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அறிவிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் ஆஜராக வேண்டும்.

6. எந்தவொரு காரணத்திற்காகவும், அது பிறருக்குத் தெரிவிக்கப்பட்டாலும் தெரிவிக்கப்படாவிட்டாலும், தகுதியற்றதாகக் கண்டறியப்பட்டால், எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிப்பதற்கான உரிமையை அறக்கட்டளை கொண்டுள்ளது.

## தேர்வுகளை நடத்துதல்

7. தேர்வுகள் தேவைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்படும்.

8. விண்ணப்பத்தைப் பெற்ற பிறகு, தகுதியான விண்ணப்பதாரர்கள், ஸபாத் தேர்வுகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதை உறுதிசெய்ய, அறக்கட்டளையின் பரீக்ஷா அதிகாரிகள் குழுவின் தேர்வாளரால் ஆன்லைன் சேர்க்கை சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். சோதனை முடிந்த 2 நாட்களுக்குள் முடிவை ஸபா முறையாக தெரிவிக்கும்.

9. விண்ணப்பதாரர் சேர்க்கை தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால், தேர்ச்சி பெற்ற நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் விண்ண'ப்பதாரருக்கு தேர்வுகளை நடத்த அறக்கட்டளை ஏற்பாடு செய்யும்.

10. பரீக்ஷைகள் வாய்மொழியாக இருக்க வேண்டும் மற்றும் மாணவர்கள் நினைவாற்றலில் இருந்து மட்டுமே ஓத வேண்டும். எந்த புத்தகம் அல்லது சாதனம் ஆகியவற்றை உபயோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. தேர்வின் போது வெளி உதவி எதுவும் அனுமதிக்கப்படாது.

11. தேர்வுகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் கண்டிப்பானதாகவும் தரப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும். தேர்வுகள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படும். அறக்கட்டளையின் பரீக்ஷா அதிகாரிகள் குழுவால் வழங்கப்படும் மதிப்பெண்கள் இறுதியானவை மற்றும் எந்த சர்ச்சைக்கும் உட்பட்டவை அல்ல.

12. பரீக்ஷா அதிகாரிகள் குறிப்பிடும் வார்த்தைகளில் தொடங்கிச் சொல்லவேண்டிய பஞ்சாஶத்/ ரிக்/ மந்திரம்/ ஸாமத்தை குறிப்பிட்டுப் பல கேள்விகளைக் கேட்டு மாணவர்கள் முழுமையாக ஆய்வு செய்யப்படுவார்கள். (ஸமானா பங்க்தி ப்ரஶ்னம்).

13. ஸமானா பங்க்தி ப்ரஶ்னங்கள் மட்டுமில்லாமல், 15 கேள்விகள் கீழ்கண்ட முறையில் அமையும்-
    - ➢ காண்டம்/அத்யாயம்/ப்ரஶ்ணம்/அனுவாகம்/பஞ்சஶத்/ரிக்/மந்த்ரம் போன்றவற்றின் எண்ணிக்கையை மட்டும் குறிப்பிட்டு ஐந்து கேள்விகள் கேட்கப்படும். (ஸங்க்யா பங்க்தி ப்ரஶ்னம்)
    - ➢ ஐந்து கேள்விகளுக்கு, பரீக்ஷா அதிகாரியால் குறிப்பிடப்பட்ட ஒன்றின் அடுத்த பஞ்சஶத்/ரிக்/மந்த்ரத்தை உச்சரிக்க வேண்டும். (உத்தரா பங்க்தி ப்ரஶ்னம்).
    - ➢ மந்த்ரங்களின் சிறப்பு/திரும்பி வரும் அம்ஶசங்களில் ஐந்து கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். (விஶேஷபங்க்தி ப்ரஶ்னம்)

14. ஒவ்வொரு கேள்வியும் 10 மதிப்பெண்களைக் கொண்டுள்ளது – நினைவாற்றலுக்கு 4 + உச்சரிப்புக்கு 3 + ஸ்வரத்திற்கு 3. ஸங்க்யா மற்றும் உத்தரா வகை வினாக்களுக்கு, மாணவர்கள் கேட்கும் பகுதியை சரியாக ஆரம்பித்துச் சொல்லத் தொடங்கவில்லை என்றால், அவருக்கு ஆரம்ப மந்த்ரவார்த்தைகள் எடுத்துக் கொடுத்து உதவப்படும். ஆனால் அவரது நினைவாற்றல் தகுதியிலிருந்து 1 மதிப்பெண் குறையும். இருப்பினும் விசேஷ வகை வினாக்களுக்கு மாணவரால் முழுமையாக பதிலளிக்க முடியவில்லை என்றால், பரீக்ஷா அதிகாரி தகுதியான மதிப்பெண்களை தீர்மானிப்பார்.

15. ஒவ்வொரு வேதத்திற்கும் குறிப்பிடப்பட்ட முழு பாடத்திட்டத்திலும் தேர்வு நடத்தப்படும். மதிப்பெண்கள் 60% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள்தான் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்கள்.

16. அறக்கட்டளையின் அனைத்து தகவல்தொடர்புகளும் விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட WA எண் மூலமாக இருக்கும். விண்ணப்பதாரரின் விருப்பப்படி மின்னஞ்சல் தொடர்பு கூடுதலாக இருக்கும்.

## சான்றிதழ் மற்றும் வெகுமதி

17. வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே வெகுமதி, சான்றிதழ், தேர்வு மற்றும் வெகுமதி விழா நடைபெறும் இடத்திற்கான வருதல் மற்றும் திரும்பிப்போதலுக்கானப் பயணச் செலவுகளை திருப்பப் பெற தகுதியுடையவர்கள்.

18. அறக்கட்டளை நேரிலோ அல்லது தபால் மூலமோ சான்றிதழ்களை ஒப்படைக்கும். ரொக்க வெகுமதிகள் விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

19. 60% க்கும் குறைவான மதிப்பெண்களைப் பெறும் மாணவர்கள் "வெற்றி பெறவில்லை" என்று அறிவிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் எந்தச் சான்றிதழையும் வெகுமதியையும் பெறத் தகுதி அடையாதது மட்டுமின்றி, தேர்வில் பங்குபெற இழைத்த பயணச் செலவுகளையும் திருப்பித்தரப்படமாட்டார்கள்.

20. மாணவர்கள் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் சதவிகிதத்துடன் சான்றளிக்கப்படுவார்கள் மற்றும் அவர்கள் விரும்பினால், முந்தைய செயல்திறனை மேம்படுத்துவதற்கு பின்வரும் ஆண்டில் அதே தேர்வுக்கு மீண்டும் ஒரு முறை ஆஜராக அனுமதிக்கப்படுவார்கள். மாணவர் இந்த கூடுதல் முயற்சியை முதல் முயற்சியின் தேதியிலிருந்து அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்குள் அல்லது அவரது 30 வயதுக்கு முன் எது முந்தையதோ அதை தேர்வு செய்யலாம். மாணவர் தனது இரண்டாவது முயற்சியில், அதிக வெகுமதி வரம்பில் விழும் மதிப்பெண்களைப் பெற்றால், புதிய சதவீத மதிப்பெண்களுடன் கூடிய புதிய சான்றிதழையும், வேறுபட்ட கூடுதல் வெகுமதித் தொகையையும் சேர்த்து அறக்கட்டளையால் தரப்படுவார்கள். செயல்திறனை மேம்படுத்தும் மாணவருக்கு மட்டுமே பயணத் தொகை வழங்கப்படும்.

21. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பின்வரும் வெகுமதித் தொகைகள் வழங்கப்படும்.

| பாடப்பகுதி/மதிப்பெண்கள் | 60%- 69% | 70%-79% | 80%-89% | 90% and above |
|---|---|---|---|---|
| முலபாடம்/ பூர்வபாகம் | 5000 | 6000 | 8000 | 10000 |
| க்ரமபாடம்/உத்தரபாகம் | 7500 | 8500 | 10500 | 12500 |
| கனபாடம்/ விஶேஷபாகம் | 10000 | 11000 | 13000 | 15000 |

22. மாணவனை தயார்படுத்துவதில் ஆசிரியர்களின் விலைமதிப்பற்ற சேவைகளை அங்கீகரிக்கும் வகையில், வெற்றிகரமாக தேர்ச்சி பெறும் மாணவரின் ஆசிரியருக்கு, மாணவரின் தகுதியான வெகுமதியில் 20% வெகுமதியாக வழங்கப்படும்.

23. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தேர்வு முடிந்த உடனேயே வெற்றிபெற்றதற்கான தற்காலிக சான்றிதழ் வழங்கப்படும். எவ்வாறாயினும், வெற்றி பெற்ற மாணவர்களின் இறுதித் தேர்ச்சிச் சான்றிதழ்கள், தேர்வுத் தேதிக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் ஆண்டு விழாவில் ஒப்படைக்கப்படும்.

# OM CHARITABLE TRUST

**Regd. Office: 49, Five Furlong Road, Guindy, Chennai – 600032, Tamilnadu, India**
**Website: www.omcharitabletrust.com E-mail: omcharitabletrust@gmail.com**
**Ph: 91-9600043276, 91-9551051437**

## பயணச் செலவைக் கொடுத்தல் மற்றும் வெகுமதி விநியோகம்

24. பயணக் கோரிக்கைப் படிவத்தை ஆதரவான டிக்கெட்டுகள்/ஆவணங்களுடன் சமர்ப்பித்தால், தேர்வில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது பாடஶாலை/ சொந்த ஊர்/ வேலைசெய்யும் இடத்திலிருந்து (எது உண்மையாக உள்ளதோ) தேர்வு நடைபெறும் இடத்திற்கு வந்து செல்லும் பயணச் செலவு கீழ்கண்ட நியமப்படி திருப்பிக் கொடுக்கப்படும்.

    1. சாதாரண விரைவு/மெயில் வண்டி ரயில்களில் இரண்டாம் வகுப்பு படுக்கைவசதியுடன் கூடிய கட்டணம் அல்லது அதற்கு இணையான கட்டணம்.
    2. படுக்கைவசதி கொண்ட குளிரூட்டப்படாத இரவு நேர பேருந்து கட்டணம்.
    3. அரசுப் பேருந்தின் மூலம் உள்ளூர் போக்குவரத்து அல்லது அத்தகைய பேருந்துகள் கிடைக்கவில்லை என்றால், பயணத் தொடக்க நிலையத்தில் ஆட்டோ ரிக்ஷா மூலம்.
    4. பரீக்ஷை நடைபெறும் ஊரில் இரயில்/பஸ் நிலையத்திலிருந்து தேர்வு நடைபெறும் இடத்திற்கு ஆட்டோ ரிக்ஷா மூலம் உள்ளூர் போக்குவரத்து

    பயணச்செலவு இழைக்கப்பட்டச் செலவின் அளவில் கட்டுப்படுத்தப்படும்.

25. தேர்வில் பங்குபெற்ற வெற்றிகரமான மாணவருடன் வரும் ஆசிரியரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி பயணக் கோரிக்கைப் பெறப்பெற்று பயணச் செலவுகள் பெறத் தகுதி அடைவார்கள்.:

    1. அவருக்குக் கீழ் படித்து, ஒரே நேரத்தில் தேர்வெழுத வந்து வெற்றி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 3 அல்லது அதற்கும் குறைவாக இருந்தால், தேர்வில் பங்குபெறும் மாணவர்களுக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி கணக்கிடப்படும் தொகை.
    2. ஒரே நேரத்தில் தேர்வில் பங்குபெற்று வெற்றி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 4 அல்லது அதற்கு மேற்பட்டதாக இருந்தால், மூன்றாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட பெட்டியில் வீடு/ பாடஶாலையில் இருந்து தேர்வு நடைபெறும் இடத்திற்கான பயணச் செலவு.

    பயணச்செலவு இழைக்கப்பட்டச் செலவின் அளவில் கட்டுப்படுத்தப்படும்.

26. தேர்வு நடைபெறும் இடத்திற்கான பயணச் செலவுகள் தேர்வில் கலந்து கொண்ட 15 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தப்படும் மற்றும் ஆண்டு விழாவிற்கான பயணச் செலவுகள் மற்றும் வெகுமதித் தொகைகள் விழா நடந்த 15 நாட்களுக்குள் வழங்கப்படும்.

27. வெகுமதித் தொகைகள் மற்றும் பயணச் செலவுகள் ஆன்லைன் வங்கிப் பரிமாற்றங்களால் மட்டுமே செயல்படுத்தப்படும். முன்பணம் அல்லது ரொக்கமாகக் கொடுத்தல் முதலிய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

28. பரீக்ஷைக்கான பாடப் பகுதி

29. பூர்த்தி செய்து கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்தை சுய சான்றளிக்கப்பட்ட ஆதாரங்களுடன் OM Charitable Trust, 49, Five Furlong Road, Guindy, Chennai – 600032 என்ற அலுவலக முகவரிக்கு ஸ்பீட் போஸ்ட் அல்லது கூரியர் மூலம் அனுப்ப வேண்டும்:. விண்ணப்பம் பெறப்பட்ட தகவல் மற்றும் அறக்கட்டளையின் பிற தகவல் தொடர்புகள் WA எண் 9600043276 மூலம் செய்யப்படும்.